# யா/ஏழாலை புனித இசிதோர் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை

## J/ ERLALAI ST.ISIDOR ROKAN CATHALIC TAMIL MIXED SCHOOL

வருடாந்த பரிசளிப்பு விழா

# அதிபர் அறிக்கை

24.11.2017

PRINCIPAL REPORT

"கல்வியே உடைமை"

# யா/ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க.பாடசாலை

## வருடாந்த பரிசளிப்பு விழா - 2017

| | |
|---|---|
| காலம் | : 24.11.2017 வெள்ளிக்கிழமை |
| நேரம் | : பி.ப 1.30 மணி |
| இடம் | : பாடசாலை மண்டபம் |
| தலைவர் | : திரு.சி.நல்லகுமார் அவர்கள் (பாடசாலை அதிபர்) |

### பிரதம விருந்தினர்

**திரு.பா.கஜதீபன்** அவர்கள்

(மாகாண சபை உறுப்பினர், வடக்கு மாகாணம்)

### சிறப்பு விருந்தினர்

**திரு.த.மாதவன்**

(கோட்டக்கல்வி அதிகாரி, உடுவில்)

### கௌரவ விருந்தினர்

**திரு.T.S.திருஞானம்**

(ஓய்வு நிலை தபாலதிபர்)

தங்களை அன்போடு அழைக்கின்றோம்

*யா/ ஏழாலை*
*புனித இசிதோர்*
*றோ.க.த.க.பாடசாலை*

பாடசாலைச் சமூகம்

## நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை அழைத்து வரல்
- தேசியக்கொடியேற்றல்
- தேசியக்கீதம் இசைத்தல்
- பாடசாலைக்கொடியேற்றல்
- பாடசாலைக்கீதம் இசைத்தல்
- மங்களவிளக்கேற்றல்
- இறைவணக்கம்
- வரவேற்புரை
- அதிபர் அறிக்கை வாசித்தல்
- கௌரவ விருந்தினர் உரை
- ஏழாலை சகோதர இளைஞர்அமைப்பு உறுப்பினர் உரை
- சிறப்புவிருந்தினர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- பரிசளிப்பு நிகழ்வு
- கலை நிகழ்வு
- நன்றியுரை



# அதிபர் அறிக்கை

எல்லாம் வல்ல இறைஅருளை வேண்டி பாடசாலை அன்னைக்குத் தலைவணங்கி 2017ம் ஆண்டு வருடாந்த பரிசளிப்பு விழா அதிபர் அறிக்கையை முன்வைப்பதில் மகிழ்வடைகின்றேன்.

இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் வடக்கு மாகாணசபை உறுப்பினர் உயர்திரு. பா.கஜதீபன் அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் எமது உடுவில் கல்விக்கோட்ட அதிகாரி உயர் திரு. த.மாதவன் அவர்களே, கௌரவ விருந்தினராக சிறப்பித்துக் கொண்டிருக்கும் ஓய்வுநிலை தபாலதிபர் உயர்திரு. T.S திருஞானம் அவர்களே, அயற் பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, எமது பாடசாலை ஆசிரியர்களே, மாணவர்களே, முன்பள்ளி ஆசிரியர்களே, பெற்றோர்களே, பழைய மாணவர்களே, பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களே, நலன் விரும்பிகளே, அனைவருக்கும் இந்நேர வணக்கம் உரித்தாகட்டும்.

இன்றைய எமது விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் வடக்கு மாகாணசபை உறுப்பினர் மதிப்பிற்குரிய திரு. பா கஜதீபன் அவர்கள் கல்விப் புலத்தில் பணியாற்றி இன்று மக்களின் சேவை கருதி அரசியல் புலத்தில் கால் பதித்த ஒருவராவார். ஆதலினால் மாணவரின் கல்வியில் அதீத அக்கறை காட்டி செயற்படும் ஒருவராவார். பின் தங்கிய பிரதேசங்களில் உள்ள பல பாடசாலைகளுக்கு தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து அரிய பல சேவைகளைச் செய்து வருகின்ற ஒருவராவார். அது மட்டுமன்றி இக் கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் என்று கூறிக்கொள்வதில் பெருமகிழ்வடைகின்றோம். எனவே தங்களின் வரவால் பாடசாலைச் சமூகம் மகிழ்வடைகின்றது.

எமது அழைப்பை ஏற்று சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் எமது கோட்டக்கல்வி உத்தியோகத்தர் திரு. த மாதவன் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் வெளிநாட்டுப் பயிற்சியை முடித்த ஒருவராவார் எனவே அவரின் வழிகாட்டலில் எமது உடுவில் கோட்டப் பாடசாலைகள் கூடுதல் வளர்ச்சி பெறும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும். எனவே அவர் கோட்டத்திற்கு வருகை தந்து சில மாதங்களே ஆனாலும் எம்மோடு நட்புறவோடு பணியாற்றும் ஒரு அதிகாரியாவார். அவரின் வரவு எம்மை மகிழ்ச்சியடைச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

கௌரவ விருந்தினராக வருகை தந்திருக்கும் ஓய்வு நிலை தபாலதிபர் திரு. T.S திருஞானம் அவர்கள் இக்கிராமத்தில் உள்ள பாடசாலைகள் முன்பள்ளிகளுக்கு தானாகவே ஓடிச் சென்று மாணவரின் கல்வி ஊக்குவிப்புக்காக உதவி செய்யும் ஒரு பெருமனது கொண்ட ஒருவராவார். எமது நிகழ்வுகளில் கலந்து பிள்ளைகளோடு பிள்ளைகளாகவே மாறி பிள்ளைகளை மகிழ்ச்சிப்படுத்தும் ஒருவர். அவரின் வருகை எம்மை மகிழ்விக்கின்றது.

மேலும் எமது பாடசாலை நலனில் அக்கறை கொண்டு எமது நிகழ்வுகள் அனைத்திலும் பங்கு கொள்ளும் ஏழாலை சகோதர இளைஞர் அமைப்பினரின் வருகையால் பேருவகை கொள்கிறோம்.

எமது பாடசாலையின் மீது நம்பிக்கை வைத்து பிள்ளைகளைக் கல்விச் செயற்பாட்டிற்காக எமது பாடசாலைக்கு அனுப்பும் பெற்றோருக்கு நன்றி தெரிவிப்பதோடு, பிள்ளைகளின் நலனில் அக்கறை கொண்டு பாடசாலைச் சமூகத்துடன் உங்களுடைய உறவை மேலும் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். என்ற கோரிக்கையையும் இங்கே முன்வைக்கின்றேன். எமது பாடசாலையின் மாணவர்கள் சேர்வு வீதம் ஆரோக்கியமானதாகவும்

நம்பிக்கையூட்டுவதாகவும் உள்ளது. இவை மேலும் கட்டி யெழுப்பட்ட வேண்டும்.

பிள்ளையின் கல்வி, இணைப்பாடச் செயற்பாடுகளுடன் அவர்களின் நல்லொழுக்க விழுமியங்கள் கட்டியெழுப்பட வேண்டும். இன்றைய சமூக மாற்றங்கள், சமூக சீரழிவுகளை தோற்றுவிப்பதோடு சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துச் செல்வதையும் காணக் கூடியதாக உள்ளது. எனவே பெற்றோர்களே! பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்து வதோடு போசாக்கு மிக்க ஆரோக்கியமானவர்களாக அவர்களை வளர்க்க வேண்டிய பொறுப்பு உண்டென்பதை மறந்து விடக் கூடாது.

எமது பாடசாலையானது தரம் 1-5 வரையான வகுப்புக்களை உள்ளடக்கிய பாடசாலையாகும். ஏழாலை கிழக்கைச் சேர்ந்த பரமானந்தர் பொன்னம்பலம் (மிசனறிப் பொன்னம்பலம்) என்பவரால் 1892ல் உருவாக்கப்பட்டு "கல்வியே உடைமை" என்கின்ற மகுட வாசகத்தைக் கொண்டு தற்போது 79 மாணவர்களுடனும் 06 ஆசிரியர்களுடனும் சிறப்பாக இயங்கி வருகின்றது. இலங்கை அரசினால் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டிருப்பது சிறப்பு அம்சமாகும். தற்போதைய மாணவர் சேர்வு போக்கை நோக்குமிடத்து 2019இல் ஆண்டளவில் 100ற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டு இயங்கும் பாடசாலையாக மாற வாய்புள்ளது. என்பதை மகிழ்வுடன் தெரியப்படுத்துகின்றேன்.

இவ்வருடம் தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சைக்கு 13 மாணவர்கள் தோற்றி 01 மாணவி வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்றுள்ளார். என்பதையும், 09 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்டனர். என்பதையும் இனிவரும் காலங்களில் இச் சித்தி வீதத்தினை உயர்த்துவதற்கான

செயற்றிட்டங்களை முன்னெடுத்துச் செல்வதில் எமது ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### பாடசாலை நிர்வாக மேற்பார்வை

இதன் செயற்பாட்டிற்கு எமது பாடசாலை முகாமைத்துவக் குழு பொறுப்பாக இருந்து செயற்படுகின்றது. தரம் - 01 05 வரை கற்பிக்கும் அனைவரும் அதிபரோடு இணைந்து முகாமைத்துவத் குழுவாக இணைந்து ஒற்றுமையுடனும், பொறுப்புடனும், நேர்மையுடனும் செயற்படுவது பாராட்டத்தக்கதாகும்.

### உணவூட்டல் செயற்றிட்டம்

உலக உணவுத் திட்ட அமைப்பினால் வழங்கப்படும் உணவுப் பொருட்களைக் கொண்டு மாணவர்களுக்கு சிறப்பான முறையில் உணவு வழங்கப்படுகின்றது. இதற்கு பொறுப்பா சிரியராக திரு. கு கேதீஸ்வரன் ஆசிரியர் அவர்களும் உதவியாக திருமதி. சு.பத்மநாதன் ஆசிரியரும் செயற்படுகின்றனர் உணவு சமைத்து வழங்கலில் எமது பாடசாலை பழைய மாணவி திருமதி. ஜே சிவகுமார் அர்ப்பணிப்பான சேவையை வழங்கி வருகிறார்.

### தமிழ் மன்றம், இந்து மன்றம்

தமிழ் மன்றத்தின் போசகராக திருமதி அ.கருணாகரன் ஆசிரியர் அவர்கள் செயற்படுகின்றார். மாதத்தில் இரு தடவைகள் மாணவர் மன்றச் செயற்பாடுகள் நடைபெறுவதுடன் தமிழ்த் தின போட்டிகளுக்குரிய பேச்சு, வாசிப்பு, கட்டுரை, கதை கூறல், திருக்குறள் மனனப் போட்டிகளுக்கு களம் அமைத்துக் கொடுக் கின்றது. இந்து மன்றத்தின் போசகராக திருமதி. சு சாந்தகுமார் ஆசிரியர் செயற்படுவதுடன் நவராத்திரி விழாவினை ஒட்டிய போட்டிகளான கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல், சகலகலா வல்லி மாலை போட்டிகள் நடாத்தி

விஜயதசமி அன்று மாணவர்களுக்கு பரிசில் வழங்கி ஊக்குவிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வருவது பாராட்டப்பட வேண்டிய தாகும்.

## கிறிஸ்தவ மன்றம், சுகாதார மன்றம்

இம் மன்றங்களுக்கு போசகராக திரு. க மதிரூபன் ஆசிரியர் அவர்கள் செயற்படுவதுடன் கிறிஸ்தவ மன்றம் வருடந்தோறும் ஒளி விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடி வருகின்றது. சுகாதார மன்றச் செயற்பாடுகளினூடாக பாடசாலைச் சுத்தம், டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் என்பன சிறப்பான முறையில் மேற்கொள்ளப் படுகின்றது.

## வங்கிச் சேவை

இப் பாடசாலையில் மக்கள் வங்கியின் “சிசு உதான” வங்கி அலகும், தேசிய சேமிப்பு வங்கியின் “சிறுவர் சேமிப்பு” அலகும் சிறப்பாக செயற்படுகின்றது. அனைத்து மாணவர்களுக்கும் சேமிப்புத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர். என்பதுடன் இதற்கு பொறுப்பாக திருமதி. சு சாந்தகுமார் ஆசிரியர் அவர்கள் சிறப்பான முறையில் செயற்பட்டு வருகின்றார்.

## வழிகாட்டல் ஆலோசனை, விசேட கல்வி

வழிகாட்டல் ஆலோசனை சேவைக்கு பொறுப்பாக திருமதி. சு.சாந்தகுமார் ஆசிரியர் அவர்கள் செயற்படுகின்றார். உள நெருக் கடிகளுக்கு உள்ளான மாணவர்களைக் இனங்கண்டு அதற்குரிய காரணங்களை அறிந்து அவர்களுக்கு வேண்டிய ஆலோசனை களையும் வழிகாட்டலையும் வழங்கி அவர்களை உள நெருக்கடி யிலிருந்து விடுபடச் செய்து ஏனைய மாணவர்களுடன் சேர்ந்து கற்கச் செய்வதே அதன் நோக்கமாகும். விசேட கல்விக்கு பொறுப்பாக திரு.கு.கேதீஸ்வரன் ஆசிரியர் அவர்கள் செயற் படுகின்றார். உட்படுத்தல் கல்வி செயற்றிட்டத்தினுடாக இம் மாணவர் ஆற்றுப்படுத்தப்படுவதுடன் மாற்றுவலுவுள்ளோர் பங்கு

பெறும் போட்டிகளிலும் இம் மாணவர் பங்கு பெறச் செய்தல் போன்ற செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

## செயற்பட்டு மகிழ்வோம்

மாணவர்களின் உடல் ஆரோக்கியத்தை பேணும் இச் செயற்பாட்டிற்கு பொறுப்பாக திரு.வ.திருப்பதிராசன் ஆசிரியர் அவர்களும், அவருக்கு உதவியாக திரு. க மதிரூபன் ஆசிரியர் அவர்களும் செயற்படுகின்றனர். மாணவர்களுக்கான பயிற்சிகள் சிறப்பான முறையில் வழங்கப்பட்டு குடும்ப, கோட்ட போட்டிகளில் மாணவர்கள் பங்கு பற்ற வழிப்படுத்தப்படுகின்றது.

## ஆசிரியர் நலன்புரிக் கழகம்

இக் கழகமானது திரு.வ.திருப்பதிராசன் ஆசிரியர் அவர்களைக் தலைவராகக் கொண்டு அனைத்து ஆசிரியர்களையும் அங்கத் தவர்களாகக் கொண்டு ஆசிரியர்களின் பிறந்த நாள் கௌரவிப்பு மற்றும் சுக, துக்க நிகழ்வுகளில் கலந்து கொண்டு சமூக ரீதியான உறவுகளைப் பேணி வருகின்றது.

### பாடசாலை அபிவிருத்திச் சபை

பாடசாலை அபிவிருத்திச் சபையானது பாடசாலை முன்னேற்றம் சம்பந்தமாக அதிக அக்கறையுடன் செயற்படுவதுடன் பாடசாலை நடைமுறைக்கான அனைத்து தீர்மானங்கள் எடுப்பதிலும் பங்கெடுப்பதுடன் விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா, ஆசிரியர் தின விழா, கட்டாயக்கல்வி செயற்பாடு போன்றவற்றில் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது.

## பாடசாலைத் தேவைகள்

மாணவர் சேர்வு வீதம் அதிகரித்து வருவதனால் மிக மோசமான இட நெருக்கடியையும் தளபாடப் பற்றாக்குறையும் எதிர்நோக்கியுள்ளோம். எனவே இரு வகுப்பறைகளைக் கொண்ட ஒரு தனியான வகுப்பறைத் தொகுதி தேவை மாணவர்கள்

நெருக்கடி இன்றி இருந்து கல்வி கற்பதற்கான தளபாட வசதிகளைக் கோரி நிற்கின்றோம்.

மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தி கற்றல் அடைவுமட்டத்தை கூட்டுவதற்காக "சிறுவர் நூலகம்" ஒன்று மிக முக்கியமானதாக உள்ளது.

நவீன கற்றல் வசதிகளை மேற்கொள்ளும் பொருட்டு கணினித் தொகுதி, பல்லூடக ஏறியி போன்றவற்றுடன் கூடிய "சிமாட்" வகுப்பறை ஒன்று தேவை என்பதையும் பிரதம விருந்தினர் அவர்களின் மேலான கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றேன்.

## நன்றிக்குரியவர்கள்

எமது பாடசாலைத் தேவைக்கான போட்டோக் கொப்பி இயந்திரத்தை அமரர்.சௌ.ஆனந்தராணி ஞாபகார்த்தமாக வழங்கிய திரு. சௌ. றணா அவர்களுக்கும், இன்றைய பரிசளிப்பு நிகழ்வுக்கான நிதி அனுசரணையாக ரூபா 30000 வழங்கிய றயின்டகுமார்-தாமினி, இசனா, சாரா (நோர்வே) குடும்பத்தினருக்கும், புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவி செல்வி அ.அபிநயாவிற்கு துவிச்சக்கரவண்டி வழங்கிய "ஏழாலை சகோதர இளைஞர் அமைப்பினருக்கும்", அம் மாணவிக்கு ரூபா 5000 பணப்பரிசினை வழங்கிய திரு. T.S திருஞானம் ஐயா அவர்களுக்கும், மாணவிக்கு ரூபா 1000 பணப் பரிசினை வழங்கிய திரு. ந. விக்னேஸ்வரன் அவர்களுக்கும், திருமதி சிவரூபி பத்மநாதன் (கட்டுரைப்புத்தகம்) அவர்களுக்கும், பாலசுப்பிரமணியம் செந்தூரன்(கட்டுரைப்புத்தகம்) அவர்களுக்கும் மற்றும் ரூபா 1000 வழங்கிய சுன்னாகம் சித்திவிநாயகர் புத்தக நிலையத்தினருக்கும், அமரர் தம்பித்துரை ஜீவானந்தம் அவர்களின் ஞாபகார்த்தமாக ரூபா 5000 அன்பளிப்புச் செய்த திருமதி மங்களீனா காண்டீபன் அவர்களிற்கும், நன்றி தெரிவிப்பதுடன் எமது பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் திரு. க. ஜெயராசா

அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது துணைவியார் திருமதி. ஜெ. பகவதி ஆசிரியர் அவர்களால் வருடா வருடம் தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசில்களை வழங்கி வருவதும் இவ்விடத்தில் நினைவு கூறத்தக்கது. மேலும் சிறப்பு மாணவருக்கான பரிசில் நிதியாக 2000 வழங்கிய தனஞ்சயன்-கயல்விழி குடும்பத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

இன்றைய விழாவிற்கு அதிதிகளாக வருகை தந்து எமது நிகழ்வைச் சிறப்பித்த பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர் அவர்களுக்கும், ஒலி அமைப்பு செய்து தந்த திரு. சு. சுதர்சன் அவர்களுக்கும், கதிரைகள் வழங்கிய திரு. சி. உதயகுமார் அவர்களுக்கும், பாடசாலை வளர்ச்சிக்கு உறு துணையாக செயற்படும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விக் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கோட்டக் கல்வி உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன் நிகழ்விற்கு வருகை தந்த அயற்பாடசாலை அதிபர்கள். ஆசிரியர்கள், நிகழ்வு சிறக்க உறுதுணை வழங்கிய எமது பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்க்ள, பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

## பரிசு பெறும் மாணவர் விபரம்

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவி

அரிதரன் அபிநயா 156 புள்ளிகள்

**70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்**

| | |
|---|---|
| சுந்திரமோகன் டனுர்ஜன் | - 114 |
| கோவிந்தராசா நிசாந்தன் | - 110 |
| உதயகுமார் அஸ்விதா | - 105 |

மோகனராஜ் நிவேதன் - 103
சுதர்சன் தமிழ்குமரன் - 98
தயபாலன் டனோசன் - 94
செல்வகுமார் தினேகா - 85
சத்தியசீலன் மதுசானி - 78

### 2017ல் தரம் – 1இல் கல்வி கற்கும் மாணவர்கள்

கி. விஜாஸ் - பொதுத் திறமை 1ம் இடம்
தமிழ், கணிதம், சுற்றாடல், உயர் புள்ளி
த. விதாருஜன் - பொதுத் திறமை 2ம் இடம்
சமய பாடம் உயர் புள்ளி
ப. அகன்ஜா பொதுத் திறமை 3ம் இடம்
ரா. அஸ்வின்றோய் - றோமன் கத்தோலிக்கம் உயர் புள்ளி

### 2016ல் தரம் – 1 இல் கல்வி கற்ற மாணவர்கள்

சு. சஜீர்த்தனா பொதுத் திறமை 1ம் இடம்
சமயம், கணித பாடம், உயர்புள்ளி
செ. மானஷா பொதுத் திறமை 2ம் இடம்
சமயம், தமிழ், சுற்றாடல் உயர் புள்ளி
ச. பவித்திரா பொதுத் திறமை 3ம் இடம்
தமிழ், சுற்றாடல் உயர்புள்ளி
ஆங்கிலம் குழப்பாடல் - கோட்டம் - 2ம் இடம்

### 2016ல் தரம் 2ல் கல்வி கற்ற மாணவர்கள்

த. சுபர்த்திகா பொதுத் திறமை 1ம் இடம்
சமயம், தமிழ், சுற்றாடல் உயர் புள்ளி
கி. வினிஸ்ரன் - பொதுத் திறமை 2ம் இடம்
ஹ. தர்மினி பொதுத் திறமை 3ம் இடம்
கணித பாடம் உயர்புள்ளி
துரித கணிதப் போட்டி கோட்டமட்டம் 1ம் இடம்
அ. மேரிஜெனிபர் - றோமன்கத்தோலிக்கம் உயர் புள்ளி

**2016ல் தரம் 3ல் கல்வி கற்ற மாணவர்கள்**

கி. பிரணவி  பொதுத் திறமை  1ம் இடம்

சமயம்,ஆங்கிலம் உயர் புள்ளி

ற. சித்தார்த் - பொதுத் திறமை  2ம் இடம்

தமிழ், கணிதம், சுற்றாடல் உயர் புள்ளி

உ. யதுர்ஜிகா  பொதுத் திறமை  3ம் இடம்

ஆ. றொனால்ட் - றோமன்கத்தோலிக்கம் உயர் புள்ளி

2016ல் தரம் 4ல் கல்வி கற்ற மாணவர்கள்

உ. அஸ்விதா  பொதுத் திறமை  1ம் இடம்

ச. டனுர்ஜன் - பொதுத் திறமை  2ம் இடம்

சமயம், சுற்றாடல் பாடம் உயர்புள்ளி

அ. அபிநயா  பொதுத் திறமை 3ம் இடம்

தமிழ்“, கணிதம் உயர் புள்ளி

**2016ல்தரம் 5ல்கல்வி கற்ற மாணவர்கள்**

அ. கரிகிஸ்ணன் - பொதுத் திறமை  1ம் இடம்

சமயம், தமிழ், ஆங்கிலம், சுற்றாடல் உயர் புள்ளி

ல. சேரன் - பொதுத் திறமை  2ம் இடம்

கணித பாடம் உயர்புள்ளி

பி. கம்சன் - பொதுத் திறமை  3ம் இடம்

## தூர நோக்கு

பிரதேசத்தின் தனித்துவமான பண்புகளை உள்வாங்குவதுடன் உலகமயமாக்கலுக் கேற்ற வகையில் ஆளுமை மிக்க சமூக ஒத்திசைவுள்ள மாணவர்களை உருவாக்கல்

## Vision

moulding of students to be social and dynamic personalities with induviduval cultural Aspects Fit to be world citizens.

## நோக்கக் கூற்று

தேசிய கலைத்திட்டத்திற்கு அமைவாக பாடசாலையின் பௌதீகச் சூழலையும், மனித வளத்தையும் கருத்திற் கொண்டு மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கை விருத்தி செய்தல்

## Mission

The development of knowledeg and attitude of students to suit the local environment and the national education system.

## மகுடவாசகம்

கல்வியே உடைமை

# பாடசாலைத் தகவல்கள்

| | | |
|---|---|---|
| பாடசாலையின் பெயர் | : | யா/ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க.பாடசாலை |
| முகவரி | : | ஏழாலை கிழக்கு |
| கிராம அலுவலர் பிரிவு | : | ஏழாலை கிழக்கு J/204 |
| பிரதேச செயலர் பிரிவு | : | வலி தெற்கு |
| கோட்டம் | : | உடுவில் |
| வலயம் | : | வலிகாமம் |
| மாவட்டம் | : | யாழ்ப்பாணம் |
| மாகாணம் | : | வடமாகாணம் |
| உள்ளூராட்சிப்பிரிவு | : | சுன்னாகம் |
| தேர்தல் தொகுதி | : | மானிப்பாய் |
| பாடசாலை தொ.பே.இல | : | 0212242926 |
| பாடசாலை இலக்கம் | : | 1010016 |
| தொகை மதிப்பு எண் | : | 09192 |
| பரீட்சை இலக்கம் | : | 11080 |
| வகுப்பு பரம்பல் | : | தரம் 01 - 05 வரை |
| பாடசாலைத் தரம் | : | III |

# பாடசாலைக் கீதம்

வாழ்த்தியே நாமேற்றுவோம்
நம் இசிதோர் கல்லூரியே!
ஓங்கியே வளர்ந்திட
வாழ்த்தி ஏற்றுவோம்

புனித இசிதோர் மாமுனி பெயரால்
ஏழாலை எம் பதியில்
மங்கா மாண்புடன் வீற்றிருக்கும்
எங்கள் காவலரே

(வாழ்த்தியேற்றுவோம்)

கற்றதை உணர்ந்து கற்றபடி நாங்கள்
விந்தைகள் புரிந்திட
விரும்பும் பொருட்கள் வேண்டி
இத்தரை மீதில் வாழ்ந்திட

(வாழ்த்தியே)

புலமை பலவும் பெற்றிடும்
புதுமைப் படைப்பாக
புகழ்தரும் கலைகள்
பயில் நல் கூடத்தை

(வாழ்த்தியே)

எல்லோர்க்கும் உதவும் உத்தமர் ஆகவே
நாமும் வாழ்ந்திட
வேண்டினோம் உம்மையே
நிதமும் அருள்வாயே

(வாழ்த்தியே)